ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
அபாயப் பயணம்
ரூ 2

குயிலம்மா!

குயிலம்மா குயிலம்மா
குக்கூ குக்கூ குயிலம்மா
குயிலம்மா குயிலம்மா
கூவிப் பாடும் குயிலம்மா!

கறுப்பாய் இருப்பாய்
கண்ணுக் கழகாய் நீயம்மா
விருப்பாய்ப் பாடுவாய்
விரும்பிக் கேட்போம் யாமம்மா!

நிறத்தில் கறுப்பாய்
நீயிருந் தாலும் குயிலம்மா
திறத்தில் சிறந்த
தீங்குரல் கொண்டாய் குயிலம்மா!

வேற்றுமை நிறத்தில்
வேண்டாம் என்பாய் நீயம்மா
வேற்றுமை நிறத்தில்
விரும்ப மாட்டோம் யாமம்மா!

-செல்வி இ. ஜீவா

அறுவை செய்யும் எந்திரமனிதன்!

கடந்த 1990-ம் ஆண்டில், அமெரிக்காவிலிருந்து 51 கோடியே 74 இலட்சம் டாலர்கள் மதிப்புள்ள எந்திரமனிதர்கள் (ரோபாட்) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரும்பாலாவை, மோட்டார்வாகனத் தொழிலுக்குப் பயன்படக்கூடிய எந்திரமனிதர்களாகும்.

மருத்துவத்துறையில் பயன்படுத்தக்கூடிய நுட்பமான எந்திரமனிதர்களையும் அமெரிக்கா தயாரித்து வருகிறது. மனிதனின் இதய அறுவை சிகிச்சை செய்யக்கூடிய எந்திரமனிதர்கள் தயாராகும் காலமும் வெகு தூரத்தில் இல்லை.

மிகவும் சிக்கலான நரம்பியல் அறுவை சிகிச்சை முதற்கொண்டு, இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை வரையில் பல்வேறு விதமான அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படக்கூடிய எந்திரமனிதர்கள் இப்போது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேரிலாந்து மாநிலத்தில் பால்டிமோர் நகரிலுள்ள ஜான்ஸ் காப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் சின்ரெய்க் என்னும் நரம்பியல் வல்லுநர், அறுவை சிகிச்சைகளில் எந்திரமனிதர்களைப் பயன்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறார். டொரண்டோ நகரிலுள்ள ஒரு நிறுவனத்துடன் இணைந்து புதிய 'சென்சர்' என்னும் புலன் உணர்வு சாதனம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார். மனித



மூளை அறுவை சிகிச்சையின் போது, மனிதனின் கபாலத்துக்குள் என்ன இருக்கிறது என்று காண்பதற்கு இந்த 'சென்சர்' சாதனம் உதவுகிறது. இதற்கு 'வியூவிங் வேண்ட்' என்று பெ

யரிடப்பட்டிருக்கிறது.

நீளமான இயந்திரக்கை ஒன்றின் முனையில் இந்த சென்சர் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. ஒரு கம்ப்யூட்டர் சாதனத்துடன் இயந்திரக்கை இணைக்கப்பட்டுள்ளது. மனித மண்டையைத் திறந்து அறுவை சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன்பாக, திறந்திருக்கும் அந்த மனிதனின் மண்டைக்குள்ளாக இந்த இயந்திரக்கை செலுத்தப்படுகிறது. மண்டைக்குள் இருக்கும் மூளைத் திசுக்களை சென்சர் சாதனம் அப்படியே அக்கு அக்காக ஆராய்கிறது.

இயந்திரக் கையுடன் பொருத்தப்பட்டுள்ள கம்ப்யூட்டர் விசேஷ பொத்தான்களை இயக்குவதன்மூலம், அந்தப் படங்களைப் பெரிதுபடுத்தவோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தெளிவாகப் பார்க்கவோ முடியும். தேவைப்பட்டால், அந்தப் படத்தை அப்படியே நிலையாக நிறுத்தி ஆராயவும் முடியும்.

"குறிப்பிட்ட இடத்தில் அறுவை சிகிச்சை செய்யும் முன்பாக, அந்த இடத்தை ஆராய்வத்ற்கு இது மிகவும் உதவுகிறது. உதாரணமாக, மூளைத் திசுவின் அடிப் பகுதியில் ஒரு கட்டி இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக் கட்டி எங்கே இருக்கிறது என்று நேரடியாகக் கண்டுபிடிப்பது சுலபமான காரியமல்ல. ஆனால், இந்த சென்சர் சாதனத்தைப் பயன்படுத்தி ஆராயும்போது, அக்கட்டியை முப்பரிமான வடிவத்தில் காண முடியும். நாங்கள் உடனே அங்கே அறுவை சிகிச்சை செய்ய முடியும்" என்று டாக்டர் சின்ரெய்க் கூறினார்.

மிகவும் நுட்பமான 'சைனஸ்' அறுவை சிகிச்சைக்கும், இந்த சென்சர் சாதனம் பயன்படுத்தப்படுகிறது. மூளைக்கு அருகில் உள்ள சைனசில் இருக்கும் கோளாறுகளை ஆராய்வதற்கு 'எண்டோஸ்கோப்' என்னும் சாதனத்தை டாக்டர்கள் பயன்படுத்துகின்றனர்.

மூக்கு வழியாக இந்த 'எண்டோஸ்கோப்' குழாயை நுழைத்து, அதன் ஒரு முனை வழியாகக் கண் வைத்து, டாக்டர்கள் பார்ப்பார்கள். இப்போது அந்த முனையில் இந்த சென்சர் சாதனத்தை இணைப்பதன் மூலம், மனித மண்டைக்குள் இருக்கும் சைனசின் முப்பரிமாணப் படத்தைக் கம்ப்யூட்டரில் சுலபமாக ஆராய முடியும்.

டாக்டர் சின்ரெய்க் பயன்படுத்தும் இந்த எந்திரமனிதன் அறுவை சிகிச்சைக்கு உதவுகிறதே தவிர, அதுவே நேரடியாக அறுவை சிகிச்சை எதையும் செய்வதில்லை. ஆனால், கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் ஹோவர்ட்பால், டாக்டர் வில்லியம் பர்கர் ஆகியோர்

(கடைசி பக்கம் பார்க்க)

ராணி காமிக்ஸ்-230
(மாதம் இருமுறை இதழ்)

ஜனவரி 16-31
1994

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

அபாய பயணம்

Tex Sampath Tirupur

முகமூடிவீரர் மாயாவியின் காதலி டயானா, காட்டிலிருக்கும் மாயாவிக்குக் கடிதம் எழுதினாள்.
அன்பே! உங்களை பார்த்து அதிக நாள் ஆகிவிட்டது! எப்பொழுது இங்கே வருகிறீர்கள்! டயானா.
சார்! இந்தக் கடித்தத்தை வால்கருக்குத்தானே அனுப்ப வேண்டும்!
ஆமாம்!
வால்கருக்கு ஏதாவது கடிதம் இருக்கிறதா?
இரண்டு கடிதங்கள் இருக்கின்றன!
காட்டுப் பையன் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு காட்டுக்குள் விரைந்தான்.!
மனிதக்குரங்கிடம் கடிதங்களை கொடுத்து அனுப்பினான்.
குரங்கு கடிதங்களை பெற்றுக் கொண்டு அடர்ந்த காட்டுக்குள் வந்தது. அங்கே ரெக்சும் குரனும் இருந்தார்கள்,
குரன்! குரங்கு கடிதம் கொண்டு வருகிறது!
மாயாவிக்கு இரண்டு கடிதங்கள். மாயாவி வெளியே போயிருக்கிறாரே!
டயானாவிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. என்ன அவசரமோ!

நான் மாயாவியைத் தேடிப் பிடித்து கடிதத்தை ஒப்படைத்துவிடுகிறேன்! ஜிம்போ வா செல்வோம்!
ரெக்சு கடிதங்களுடன் ஜிம்போ மீது ஏறிப் புறப்பட்டான்.
யானை வேகமாகச் சென்றது.
மாமா! மாயாவி மாமா!
வழிநெடுக ரெக்சு குரல் கொடுத்துக் கொண்டே வந்தான்.
ரெக்சு ஈடன் தீவு முழுக்க மாயாவியைத் தேடினான்.
தங்கக் கடற்கரையில் பார்க்கலாம்!
தங்கக் கடற்கரையில் மாயாவியின் வெள்ளைக் குதிரை ஹீரோ நின்று கொண்டிருந்தது.
அதோ ஹீரோ நிற்கிறதே!
மாயாவி தனி அறையில் இருந்தார். டயானாவை நினைத்துக்கொண்டிருந்தார்.
அவளை பார்த்து எவ்வளவு நாள் ஆகிவிட்டது! எப்படி இருக்கிறாளோ?

மாமா!
!
மாயாவி ரெக்சின் குரலைக் கேட்டு வெளியே வந்தார்.
மாமா! டயானா விடம் இருந்து கடிதம் வந்திருக் கிறது!
மாயாவி கடிதத்தை வாங்கிப் படித்தார்.
நான் நினைத்தது போல்தான் அவளும் நினைத் திருக்கிறாள்!
அன்பே! உங்களைப் பார்த்து அதிக நாள் ஆகிவிட்டது! எப்பொழுது இங்கே வருகிறீர்கள்! டயானா.
அவள் என்னை அங்கே வரச் சொல்லுகிறாள்!
மாமா! உங்களுக்கு இன்னொரு கடிதம் கூட வந்திருக்கிறது!
பெங்காலியா நாட்டு ஜனாதிபதி லூகாவிடம் இருந்து வந்திருக்கிறது!
இதுவும் அவசரச் செய்தியாகத்தான் இருக்கும்!

Tex Sampath Tirupur
மாயாவி இரண்டு கடிதங்களையும் மீண்டும் படித்தார்.
அன்பே! உங்களைப் பார்த்து அதிக நாள் ஆகிவிட்டது! எப்பொழுது வருகிறீர்கள்! டயானா.
ஜனாதிபதி லூகாவின் கடிதத்தில்
அவசரமாகப் பேசவேண்டும். என் அலுவலகத்துக்கு வரவும்! லூகா.
மாமா! டயானாவைப் பார்க்க போகிறீர்களா?
இல்லை! முதலில் லூகாவை சந்திக்க வேண்டும்!
டயானாவைப் பார்க்கப் போக வில்லையா?
முதலில் லூகாவை சந்திக்க வேண்டும்! என்ன அவசரமோ?
அப்படியானால், டயானா?
பிறகு பார்ப்போம்!
உடனே மாயாவி குதிரையில் புறப்பட் டார்.
என்ன அவசரமாக இருக்கும்?

பெங்காலியாவில் உள்ள யு.என். அமைப்பில்—
திருமணம் ஆகிவிட்டதா?
அலோ டயானா?
ஆகா என்ன அழகு! யாரது?
அலோ!
டயானா! மருத்துவ பயிற்சி முகாமில் இருக்கிறார்!
யு.என். அமைப்பிலிருக்கும் ஒவ்வொருவரும் அவளை அடைய முயற்சிக்கிறார்கள்!
அப்படியா?
இவர்கள் என் அழகைப் பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள்
யு.என். அமைப்பில்—
டாக்டர்! யார் விருந்து கொடுக்கிறார்கள்!
மாநிலத்தின் முதல்வர்! எல்லா மருத்துவ பயிற்சியாளர்களையும் அழைத்திருக்கிறார்!
துலானா நாட்டு அரசர் புலாரும் விருந்துக்கு வருகிறார்!
அவர் எதற்காக வந்திருக்கிறார்!
அவர் நாட்டுக்கு மருத்துவர் குழு வேண்டி வந்திருக்கிறார்!
அரசே! இவள்தான் நான் சொன்ன பெண்!
பொற்சிலை போலிருக்கிறாளே!

இவள் பெயர் டயானா! மருத்துவ பயிற்சியாளராக இருக்கிறாள்!
வணக்கம்!
வணக்கம்!
டயானாவை துலானா நாட்டு அரசர் புலாருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
புலார் டயானாவை தனியே அழைத்துச் சென்றார்.
மற்றவர்கள் காத்திருக்கிறார்கள்!
இருக்கட்டுமே! இங்கே உன் வேலை எவ்வளவு நேரம் டயானா?
காலை 9 முதல் மாலை 5 வரை!
புலார்! ரொம்பவும் வேகமாகத்தான் இருக்கிறார்!
உலகின் 3-வது பெரிய பணக்காரர் ஆச்சே!
இவ்வளவு அழகான நீ ஏன் நோயாளிகளிடம் கிடந்து அல்லாடுகிறாய்!
அதில்தான் இனிமை இருக்கிறது!
நீ ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கமும், விமானம் ஓட்டுவதில் கெட்டி என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன்!
என்னைப் பற்றி துப்பறிவதற்காகவா இங்கே வந்திருக்கிறீர்கள்!
ஆமாம் டயானா! உன்மேல் ஒரு பரிதவிப்பு ஏற்பட்டுவிட்டது!
என்னைப் பற்றி முழுக்க கேள்விப் பட்டீர்களா?
ஆமாம்! யாரோ ஒருவனை காதலிக்கிறீயாமே?

அதுவும் ஊர் பெயர் தெரியாதவனை?
என்னுடைய தனிப்பட்ட கருத்தில் தலையிட யாருக்கும் அதிகாரம் இல்லை! குட்நைட்!
புலார்! அதிகம் பேசாதீர்கள்!
என்ன டயானா! புலாரிடம் இப்படி பேசிவிட்டாய்...!
யாராக இருந்தால் எனக்கென்ன?
அரசே! அவள் ஆணவத்தில் அப்படிப் பேசிவிட்டாள்! எதுவும் நினைத்துக் கொள்ளாதீர்கள்!
டயானா வீட்டுக்கு வந்தாள்.
என்னம்மா இது! பூக்கடை தொடங்கப் போகிறீர்களா?
எல்லாம் உனக்குத்தான்! அரசர் புலார் அனுப்பியிருக்கிறார்!
உலகிலேயே மூன்றாவது பெரிய பணக்காரர். எத்தனையோ எண்ணெய் கிணறுகளுக்கு அதிபர் அவர்!
அதனால்...
அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை!
அதற்கு நான் என்ன செய்வது?
எனக்குத்தான் ஒருவர் இருக்கிறாரே!

காட்டில்—
ரெக்ஸ்! டோமா! நான் வரும்வரை காட்டுக்குள்ளே செல்லக்கூடாது!
சரி மாமா!
குரன்! அவர்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள!
நான் பார்த்துக் கொள்ளு கிறேன்!
வரட்டுமா!
மாயாவி புறப்பட்டார்.
மாமா டயானாவைத் தானே பார்க்கச் செல்கிறார்!
ஜனாதிபதி லூகாவையும் பார்க்கப் போகிறார்!
மாயாவி குதிரையில் விரைந்தார்.
டயானாவை எப்படியும் பார்த்து விடலாம்!
மாயாவி நகர எல்லைக்கு வந்தார்.
அலோ ரோமா!
வாருங்கள் மாமா!
மாயாவி கோட்டு, தொப்பி, கண்ணாடி அணிந்து சாதாரண மனிதராக மாறினார்.
மாமா! ஹீரோவை நான் பார்த்துக் கொள்கி றேன்.
நன்றி ரோமா!
மாயாவி டெவிலை மட்டும் அழைத்துக் கொண்டு நகருக்குள் நுழைந் தார்.

நேராக ஜனாதிபதி மாளிகைக்கு வந்தார்.
குட்ஈவினிங்!
குட்ஈவினிங்!
மாயாவி மாளிகைக்குள் சென்றார்.
இனி யாரும் ஜனாதிபதியை பார்க்க வரமாட்டார்கள்! தைரியமாக சிகரெட் பிடிக்கலாம்!
அவரை எங்கே? அதற்குள் மாயமாகி விட்டாரா?
மாளிகையில் ஜனாதிபதி இருந்தார்.
தட்...! தட்...!
யாரது?
வா மாயாவி! அதற்குள் வந்துவிட்டாய்! யாரும் பார்க்கவில்லையே?
இல்லை! என்னை அழைக்க காரணம் என்ன?
இரண்டுமுறை நீ என் உயிரை காப்பாற்றி இருக்கிறாய்! இப்போதும் உன் உதவி தேவை! ய.என். அமைப்பிற்கு தூதுவனாக செல்ல வேண்டும்!
யு.என். அமைப்புக்கா?

நீ அங்கே செல்வதினால் எந்தவித ஆட்சேபனையும் இல்லையே!
இல்லை! அங்கே எனக்கு நண்பர்கூட இருக்கிறார்!
நண்பரின் பெயர் டயான ஜனாதிபதி தேர்தலில் எனக்காக அவள் கடுமையாக உழைத்தாள்! அவள் அங்கே மருத்துவ பயிற்சியாளராக இருக்கிறாள்!
ஆமாம்!
அவள்கூட உன்னை பார்க்க இருக்கிறாள்! ஆனால் இது அதைவிட முக்கியமான பிரச்சினை!
விசயத்திற்கு வாருங்கள்!
சமீபத்தில் நான் மாறுவேடத்தில் நாட்டைச் சுற்றிப் பார்த்தேன்!
சொல்லுங்கள்!
நாட்டு மக்கள் பொருளாதார வசதி இல்லாமல் திண்டாடுவதை கண்கூடாகப் பார்த்தேன்!
எங்களுக்கு விதை, உரம், எந்திர சாமான்கள், மருந்துகள் போன்றவை தேவைப்படுகிறது!
யு.என். அமைப்பு நம் நாட்டுக்கு உதவ தயாராக இருக்கிறது. நீ தூதுவனாக சென்று அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்!

தேவையான பொருட்களின் பட்டியல் இந்தப் பெட்டியில் இருக்கிறது. யு.என். அமைப்பில் கொடுத்தால் நிச்சயம் உதவி கிட்டும்!
நீங்களே அதிகாரத்தோடு கேட்க வேண்டியதுதானே!
யு.என். அமைப்பில் மூன்று வருடமாக கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்!
கடிதம் எழுதிக் கேட்டால் கவனிப்பு இல்லையா?
ஆமாம்! இதை விரைவாக வாங்கிக் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு!
ஓகே! லூகா!
மாயாவி பெட்டியை பெற்றுக்கொண்டார்.
டயானா வீட்டில்—
டயானாவுக்கு பூ வந்திருக்கிறது!
இனி பூவைக்க வீட்டில் இடம் இல்லை!
டயானா உனக்குத்தான் போன்!
மன்னிக்கவும் அரசே! விருதுக்கு வர முடியாது!
நான் நாளை துபாய் செல்லுகிறேன். வந்து உன்னை பார்க்கிறேன்!
என்னை ஏன் அவர் பார்க்க வேண்டும்!
அவர் பலமுறை போன் செய்விட்டார். இவள் ஏன் கடுகடுப்புடன் நடந்துகொள்கிறாள்!

டயானா அலுவலகம் வந்தாள.
டயானாவுக்கு அரசர் அழைப்பு விடுக்கிறார்!
ஆனால் அவரை அலட்சியப்படுத்துகிறாளே!
டாக்டர்! என்னை அழைத்தீர்களாமே!
ஆமாம் நாளை துலானா நாட்டுக்குச் செல்ல வேண்டும்!
துலானாவா? அது புலாரின் நாடு தானே!
ஆமாம்! அங்கே பிளேக் நோய் பரவியிருக்கிறது! உடனடியாக ஒரு மருத்துவக் குழு செல்ல வேண்டும்!
அதற்கு நான் எதற்கு?
தூதரகத்தில் இருந்து உனக்கு அழைப்பு வந்திருக்கிறது.
சார்! துலானாவுக்கு நான் வரவில்லை!
டயானா! பிளேக் நோயில் இருந்து மக்களைக் காப்பற்றத்தான் அழைத்திருக்கிறார்கள்!
வேறு எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் கூப்பிடுங்கள்! துலானாவுக்கு மட்டும் வர வில்லை!
அரசர் புலார்! உன்னை அவசியம் வரச் சொல்லுகிறார்! அவர் வற்புறுத்தலை ஏற்றுக்கொள்ள வேண்டியது நம கடமை!
ஆனால்!
டயானா! மருத்துவத் தொழிலுக்குத்தான் போகிறோம்! நீ தவறாக எடுத்துக்கொள்ளாதே!

ஊசி எல்லாம் எதற்கு?
துலானா செல்பவர்கள் எல்லோரும் போட்டுக்கொள்கிறார்கள்!
துலானா முழுவதையும் பிளேக் நோய் தாக்கும் அபாயம் உள்ளது!
டயானா! துலானா வருவதற்கு சம்மதம் அளித்தற்கு மிக்க நன்றி!
அதேநேரம்–
மிஸ்டர் லூகா! பணியை வெற்றியுடன் முடித்துவிட்டுத் திரும்பு கிறேன்!
மிகவும் நன்றி!
அதேநேரம் டயானா வீட்டில்–
டயானா உன் டென்னிஸ் ராக்கெட்டை மறந்துவிட்டாயே!
அம்மா! நான் பொழுதை கழிக்க செல்லவில்லை! மருத்துவ வேலைக்காக செல்கிறேன்!
டயானா துலானா செல்ல தயாரானாள்.
அரசர் புலாரை மறந்துவிடாதே!
நான் அவரை மறந்து ரொம்ப நேரம் ஆகி விட்டது!
மாயாவி டயானாவை பார்க்க மறந்துவிடாதே! இந்த ரிக்கார்டுகளை அவளிடமும் காட்டு!
ஓகே.!

டயானாவின் படுக்கை அறையில் உள்ள சன்னல் ஒருத்தருக்காக எப்பொழுதும் திறந்தே இருக்கும்.
நான் வந்து கதவை திறக்கும்போது அவர் இருக்கவேண்டும்!
டயானா விமானம் நிலையம் செல்ல கார் வந்து விட்டது.
டயானா! நீங்கள் துலானா செல்வதில் ஏகப்பட்ட மகிழச்சி! வாழ்த்துக்கள்!
நன்றி!
அதேநேரம் மாயாவியும் விமானத்தில் ஏறினார்.
வாழ்த்துக்கள் வால்கர்!
நன்றி லூகா
விமானத்தில் மாயாவி டயானா நினைவில் மிதந்தார்.
இவர் தொப்பியை கழட்ட மாட்டாரோ!
இவர் நாயை எல்லாம் விமானத்தில் கொண்டு வருகிறார்!
வி.ஐ.பி.யாக இருக்கும்!
மாயாவி டயானா வீட்டுக்கு வந்து பின்புறமாக மாடிக்கு ஏறினார்.
டயானா என்னைப் பார்த்ததும் அசந்துவிடப் போகிறாள்!
டயானாவை காணோமே? தாமதித்துவிட்டேன் போலிருக்கிறது! சரி காலை வரை காத்திருக்க வேண்டியதுதான்!

டயானாவின் தாய்.
என் மகள் அந்த பணக்கார அரசரையே கட்டிக்கொண்டால் எப்படி இருக்கும்!
டயானா தன் அறையை நன்றாக பூட்டிவிட்டுச் சென்றிருக்கிறாளா? யாரும் நுழைந்துவிடப் போகிறார்கள்!
டயானாவின் அம்மா டயானாவின் அறையை திறந்து பார்த்து அதிர்ந்தார்.
டேவ்!
உள்ளே மாயாவி படுத்திருந்தார்.
மன்னிக்கவும்! இரவில் வந்தேன். அப்படியே தூங்கிவிட்டேன்! டயானாவை எங்கே?
அவள் இங்கு இல்லை!
பிறகு உங்களை சந்திக்கிறேன்!
மகிழ்ச்சி! டயானா எங்கே போயிருக்கிறாள்!
அவள் மருத்துவக் குழுவுடன் துலானா நாட்டுக்குச் சென்றிருக்கிறாள்!
அப்படியா...!

பத்திரிகையில்கூட செய்தி வந்திருக்கிறது! ஊரில் அனைவரும் இதைத்தான் பேசிக்கொள்கிறார்கள்!
ஆனால் டயானாவுக்கு துலானாவுக்குச் செல்ல மனம் இல்லை!
யார் சொன்னது?
அவள் உலகை சுற்றிப் பார்க்க ஆசைப்படுபவள் ஆயிற்றே!
எப்படியோ யு.என். அமைப்பு அவளை அழைத்துச் சென்றுவிட்டது!
ஓகோ! டயானா எவ்வளவு நாள் துலானாவில் தங்கியிருப்பாள்!
மூன்று மாதம்!
அரசர் புலாருக்கு திருமணம் ஆகவில்லை. அவளுக்கு டயானா மீது கொள்ளைப் பிரியம்!
பிடித்தால் புளியங் கொம்பாய் பிடிக்க வேண்டும். என்று முன்பே சொல்லி இருக்கிறேன்!
அதற்கு அவள் என்ன சொன்னாள்!
அவள் சொன்னது எனக்கு சரியாக நினைவில் இல்லை!
வாருங்கள் சாப்பிடலாம்!

டயானா வரும்வரை இங்கே இருங்களேன்!
இல்லை! எனக்கு வேறு வேலை இருக்கிறது!
இரவில் தரையிலா படுத்திருந்தீர்கள்!
இது ஒன்றும் புதிதல்லவே!
குகையில் வாழ்பவர்க்கு இந்தத் தரை ஒன்றும் புதிது இல்லைதான்!
அவர் மகளுக்கு பெரிய பணக்காரராக பாாததுக் கொண்டிருக்கிறார்!
எல்லா அம்மாக்களுக்கும் இருக்கிற ஆசைதான்!
பெங்காலியா ஏன் உங்களை யு.என். அமைப்புக்கு அனுப்புகிறது!
டேவ்! யு.என். அமைப்பில் ஒரு முக்கிய வேலை இருக்கிறது!
மிக்க நன்றி! நான் வரட்டுமா!
நல்லது!
மாயாவி டயானா வீட்டில் இருந்து புறப்பட்டார்.
மிகவும் இனிமையான மனிதர்!
என்ன இருந்தாலும் அரசர் புலார் மாதிரி வராது!

மாயாவி யு.என். அமைப்பிற்குச் சென்றார்.
பெங்காலியா என்னை அனுப்பியிருக் கிறது! முதலில் யு.என். அமைப்பை ஒரு பார்வை பார்த்து வருகிறேன்!
உலகில் உள்ள பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் யு.என். அமைப்புக்கு வருவது உண்டு.
இதுதான் கூட்டம் நடைபெறும் அரங்கம்!
பெங்காலியா குடியரசு அலுவலகத்திற்கு வநதாா.
யு.என். அமைப்பு கொடுக்கும் பொருட்கள் பெங்காலியாவுக்கு ஏன் அனுப்ப வில்லை!
உணவு பொருட்கள்– இயந்திர சாமான்கள்– விதைகள், தளவாட பொருட்கள்– எல்லாம் அனுப்பியிருக்கிறோம்!
நாங்கள் அனுப்பிவிட்டோம்! இதோ அதற்குரிய சாட்சிகள்!
கடந்த மூன்று ஆண்டுகளாக எதுவும் வரவில்லை என்று லூகா சொல்கிறார்!
இவர்கள் அனுப்பி விட்டோம் என்கிறார்கள்!
மாயாவி குடியரசு அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார்.
வில்லங்கமான வேலையாகத்தான் இருக்கும் போலிருக்கிறது!

மிஸ்டர் வால்கர்! பெங்காலியா தூதரை சந்திக்க நேரம் வாங்கியிருக்கி றீர்களா?
இல்லை!
நேரம் வாங்காமல் அவரை சந்திக்க முடியாது!
முதலில் இந்தக் கடிதத்தை படியுங்கள்!
தூதருக்கு, மிஸ்டா வால்கருக்கு தேவையான எல்லா உதவி களையும் செய்து கொடுக்கவும்! லூகா!
ஜனாதிபதி கடிதம் கொடுத்து அனுப்பி யிருக்கிறார்!
சார்! முதலில் உங்களை உள்ளே அனுப்புகிறேன்!
ஓகே மேடம்!
தூதர் கடிதத்தை வாங்கிப் படித்தார்.
தூதருக்கு, மிஸ்டர் வால்கருக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கவும்! லூகா
ஒரு நிமிடம் அவரை காத்திருக்கச் சொல்!
சரி சார்!
தூதர் மெதுவாக கதவை திறந்து மாயாவியை நோட்டமிட்டார்.
பிறகு யாருக்கோ போன் செய்தார்.
ஜனாதிபதி ஒருவனை என்னிடம் அனுப்பிருக் கிறார். என்ன கேட்கப் போகிறான் என்று தெரியவில்லை!

சார்! தூதர் உங்களை வரச் சொல்லுகிறார்! நாயை வெளியே விட்டு வாருங்கள்!
இது எப்பொழுதும் என்னுடன்தான் இருக்கும்!
அ...ப்படியா...!
மிஸ்டர் வால்கர் வாருங்கள்! ஜனாதிபதி கடிதத்தை படித்தேன். என்ன விசயமாக இங்கே வந்திருக்கிறீர்கள்!
ஒரு திருடனை பிடிக்க வந்திருக்கிறேன்!
வந்திருப்பது யு.என்.. அமைப்பிற்கு திருடனை பிடிக்க என்று சொல்லுகிறீர்கள்.
சில சந்தேகங்களை கேட்கலாமா?
லூகா! கடந்த மூன்று ஆண்டுகளாக 30 கோடி ரூபாய்க்கு தேவையான பொருட்களை யு.என். அமைப்பில் கேட்டிருக்கிறார்!
அதுதான் எனக்குத் தெரியுமே! ஆனால் யு.என். அமைப்பில் பதில் இல்லை!
இல்லை! அவர்கள் லூகா கேட்டதை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள் இடையில் யாரோ சுருட்டிவிட்டார்கள்!
ஆ...ஆ...
தூதருக்கு வியர்த்துக் கொட்டியது.

30 கோடி ரூபாய் பொருளை சுருட்டியது யார்?
மிஸ்டர் வால்கர்! அப்படி எதுவும் நடக்கவில்லை!
யு.என். அமைப்பில் ஏதாவது சிக்கல் இருக்கலாம்!
அப்படியானால் யு.என். அமைப்பு வேறு நாட்டுக்கு அனுப்பியிருக்கும் என்கிறீர்களா?
இருக்கலாம்!
அதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்! அதற்கு நான் உதவுகிறேன்!
அப்படியா?
மாயாவி வெளியேறியதும் தூதர் மீண்டும் தொலைபேசியில் பேசினார்.
லூகா அவனை அனுப்பி சோதனையிடச் சொல்லியிருக்கிறார். எனக்கு பயமாக இருக்கிறது!
அவனிடம் என் பெயரை உச்சரிக்காதே! நான் பார்த்துக் கொள்கிறேன்!
மாயாவி வராந்தாவில் நடந்து சென்றார். தூதர் பதட்டத்துடன் வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.
பிறகு இரண்டு பேரை அனுப்பி மாயாவியை பின் தொடர ஏற்பாடு செய்தார்.
டெவில்! யாரோ இரண்டு பேர் நம்மை பின் தொடர்கிறார்கள். எதையும் கண்டுக்காமல் வா!

Tex Sampath Tirupur

ஏய் அவனை எங்கே? திடீரென்று மாயமாகி விட்டானா?
இப்படித்தானே வந்தான்! அதற்குள் எங்கே போனான்!
கடலுக்குள் குதித்திருப்பானோ!
ஏய்! அதோ நாய் அங்கு நிற்கிறது!
இருவரும் துப்பாக்கியுடன் சரக்குப் பெட்டிகளுக்கிடையே புகுந்து மாயாவியை தேடினார்கள்!
ஆனால் மாயாவி மேலே இருந்த பெட்டி மீது படுத்திருந்து அவர்களை நோட்ட மிட்டார்.
எங்கேடா ஆளை காணோம்!
தெரிய வில்லை!
ஏய்...! யாரங்கே?
இப்போது நாயைக்கூட காணவில்லையே?
இதோ நாய் இங்கிருக்கிறது! விடக்கூடாது!
லொள்...!
திடீரென்று மேலே இருந்து மாயாவின் இரும்புக்கை அவர்களை பதம் பார்த்தது.
கும்!
கும்...!
ஆ...! அம்மா...!

மாயாவி மேலிருந்து அவர்கள் மீது பாய்ந்தார்.
ஆ...!
இந்தா வாங்கிக் கொள்!
ஆ....!
கும்...!
மாயாவியின் குத்து ஒன்றும் இடியென இறங்கியது.
ஆ...!
மாயாவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் மயங்கிப் போனார்கள்.
டெவில் அவர்களுக்கு மயக்கம் தெளிந்த பிறகு யார் என்ன என்ற விபரங்களை தெரிந்து கொள்வோம்!
இருவரும் மயக்கம் தெளிந்து எழுந்தார்கள்.
ஆ... என் தாடை போச்சு!
என்னால் எழக்கூட முடியவில்லையே!
நீங்கள் என்னை பின்தொடர்ந்து கொல்ல பார்த்தீர்கள்! அப்படித்தானே!
இல்லை! நீ எங்களை தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய்!
உங்களுடை மணிப்பர்சு என்னிடம் இருக்கிறது...!
இது நீங்கள் யார் என்று காடடிக் கொடுத்துவிடும்!

ஒருவன் கீழே கிடந்த செங்கலை எடுத்தான்.
இதில் எந்த குறிப்பும் இல்லையே! பெயர்கூட இல்லையே!
!
மாயாவியை தாக்க செங்கல் எடுத்தவன் மீது டெவில் பாய்ந்து கடித்தது.
என்னைத் தாக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறாயா?
ஏய் விடு!
இந்த நாயை அந்தப் பக்கம் போகச்சொல!
முதலில் நீங்கள் யார் என்று எனக்குத் தெரிய வேண்டும்! என்னைக் கொல்ல சொல்லி யார் அனுப் பியது?
நாங்கள் ஒன்றும் உன்னைக் கொல்ல வரவில்லை!
பொய்யா சொல்கிறீர்கள்! என்னை பின் தொடர்ந்து வரவில்லை! கொல்ல வரவில்லை! சொல்லுடா!
டமார்!
அம்மா!
!
மாயாவி இருவரின் தலையைப் பிடித்து கடுமையாக மோதினார்.

அதேநேரம் டயானாவும் மருத்துவக்குழுவும் துலானா நாட்டில் இறங்கினார்கள்.
அனைவரும் இந்த பேருந்தில் ஏறுங்கள்!
டயானா! நீங்களும் பெரிய டாக்டரும் அரண்மனைக்கு காரில் செல்லலாம்!
டயானாவும் டாக்டரும் அரண்மனைக்கு வந்தார்கள்.
டயானா! அரசர் உங்களை தனிப்பட்ட முறையில் அழைக்கச் சொன்னார்!
இல்லை! நானும் மற்றவர்களுடன் ஓட்டலிலேயே தங்கிக் கொள்ளுகிறேன்!
டயானா! இங்கே யாரும் அரசரின் கட்டளையை மீறமுடியாது!
யு.என். அமைப்பின் தலைமை டாக்டர் நானும் டயானாவும் அரசரை சந்திக்க வருவதாக சொல்!
அப்படியே ஆகட்டும்!
வா. டயானா! போய் பார்க்கலாம்!
!
ஓ.கே. டாக்டர்!

ஆகா! எவ்வளவு பெரிய அரண்மனை!
உலகிலேயே மூன்றாவது பெரிய பணக்காரர் ஆச்சே!
உள்ளே இதைவிட பிரமாண்டமாக இருக்கும் போலிருக் கிறதே!
ஆமாம்!
அரசே! உங்களைக் காண டாக்டரும் டயானாவும் வந்திருக் கிறார்கள்!
உடனே அழைத்து வா!
அலோ டயானா! வாருங்கள் டாக்டர்!
அரசே! நாங்கள் இன்றே மருத்துவ வேலையை தொடங்க லாமா?
ஆகட்டும்! உங்களுக்காக மருத்துவமனையில் மற்ற டாக்டர்கள் காத்திருக்கிறார்கள்!
நான் உங்களை ஓட்டலில் கொண்டு விடச் சொல்கிறேன்!
நன்றி! வா டயானா போகலாம்!
டயானா தங்க இங்கே அறை ஏற்பாடு செய்திருக் கிறோம்!
இல்லை! நானும் எங்கள் மருத்துவ குழுவினருடனே தங்கிக்கொள்கிறேன்!

டயானா! நீ என் விருந்தாளியாக அரண்மனையிலேயே தங்கலாம்!
இது இவன் இடம்! மிறினால் ஏதாவது செய்துவிடுவான்!
வா டயானா! தோட்டத்தை சுற்றிக் காட்டுகிறேன்!
அரசே! எங்களுக்கு அவசரக்கூட்டம் இருக்கிறது. அதில் டயானா கண்டிப்பாய் கலந்து கொள்ள வேண்டும்!
நான் அவளை அழைத்துச் செல்கிறேன்! உங்கள் தோட்டத்தை டயானா பிறகு பார்ப்பாள்!
முட்டாள் டாக்டர்! ஏன் இப்படி குறுக்கே புகுந்து கலாட்டா செய்கிறான்!
அரசே! அவசரப் படாதீர்கள்!
டாக்டர் டயானாவை அழைத்துச் சென்றார்.
இப்போதைக்கு டாக்டரின் ஒத்துழைப்பு நமக்கு தேவை
பொறுத்திருக்கிறேன்!
நல்லவேளை! என்னை கூட்டி வந்தீர்கள்!
டயானா! அவன் உன்னை இந்த நாட்டிலே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறான்!
டயானா! நான் உன்னை இங்கே அழைத்து வந்திருக்கவே கூடாது! உன்னை திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்!

மருத்துவ முகாம் செயலில் இறங்கினார்கள்.
டயானா! இன்று இரவு விமானத்தில் உன்னை அனுப்பிவிடுகிறேன்!
நான் இல்லாமல் சமாளித்துக் கொள்வீர்களா?
வேறு நர்சை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியதுதான்!
ஏய்...! டயானாவின் மீது ஒரு கண் இருக்கட்டும். எங்காவது பறந்து விடப்போகிறாள்!
அரசே! அது எப்படி பறக்க விடுவோம்!
அவள் விலை மதிப்பில்லாதவள்! அவ்வளவு எளிதில் சென்று விடுவாளா?
துலானா நாட்டில் பிளேக்நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் பார்த்தார்கள்.
அதே நேரம்– மாயாவி அந்த இருவரிடமும் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார்.
மார்...!
ஆ...!
போதும்! விட்டுவிடு!
சரி! சொல்!
என்ன கேட்டாய்...?
என்னைக் கொல்லச் சொல்லி உங்களை அனுப்பியது யார்?

அவனுடைய பெயர் எங்களுக்குத தெரியாது!
வேறு ஏதாவது அடையாளம் சொல்!
அவன் இருக்கும் இடத்தை வேண்டுமானால் சொல்லுகிறோம்!
இதோ இங்கேதான் அவன் இருக்கிறான்! அவன் முடி சிகப்பாக இருக்கும்!
போய் பார்க்கலாமா?
வேண்டாம்!
பெங்காலியா நாட்டு தூதரின் நண்பருக்கு சிகப்பு முடிதான் அவன் எங்கே இருப்பான்!
!
நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்! அவனைக கொல்ல இரண்டு பேரை அனுப்பி இருக்கி றேன்!
அவர்கள் என்ன செய்திருப்பார்கள்!
அவர்கள் விரைவில் நல்ல செய்தியுடன் திரும்பி வருவார்கள்!
வந்தவுடன் தகவல் சொல்கிறேன்!
கேட்டீர்களா!
உங்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள்!

நீட்! எனக்கென்னமோ பயமாக இருக்கிறது!
அரசர் உன்னை அமைதியாக இருக்கச் சொன்னார்!
ஏன் பதட்டப்படுகிறாய்! நான் அனுபபிய ஆள் அவனை கொன்றுவிட்டு இப்பொழுது வந்து விடுவார்கள்.
இதோ வந்து விட்டார்கள்! என்ன செய்தி என்று கேட்டுத் தெரிந்துகொள்!
?
மாயாவி இருவரையும் தூக்கி உள்ளே வீசினார்.
யார் நீ?
சிகப்பு முடிக்கு சொந்தக்காரன்! நீதானே! நீதான் என்னைக் கொல்ல ஆள் அனுப்பினாயா?
யாரிடம் என்ன பேசுகிறாய்! இவர்கள் பேச்சைக் கேட்டு என்னிடம் வந்திருக்கி றாயா?

பாஸ்! வேண்டாம் பேசாமல் உண்மையை ஒத்துக் கொள்ளுங்கள்!
முட்டாள்! வாயை மூடு! பிறகு உன்னை கவனித்துக் கொள்கிறேன்!
இவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. துரோகிகள் என்னை மிரட்டி பணம் பறிக்க முயலுகிறார்கள்!
துரோகிகள்தான்! ஆனால் அவர்கள் அல்ல! நீதான் அது!
மரியாதையாக வெளியே போகிறாயா? போலீசுக்கு போன் செய்யட்டுமா?
!?
தேவையில்லை! ஆனால் நீ உண்மையைச் சொல்!
என்ன இது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது!
ஏழை நாடான பெங்காலியாவுக்கு வந்து சேர வேண்டிய மருந்து, விதை போன்ற விவசாயப் பொருட்களை எல்லாம் திருடியது யார்? உண்மையைச் சொல்!
மாயாவி அவனைத் தூக்கி நச் என்று தரையில் போட்டார்.
பாஸ்! பேசாமல் உண்மையைச் சொல்லி விடுவது நல்லது. இல்லாவிட்டால் இவன் விடமாட்டான்!

யு.என். அமைப்பு பெங்காலியாவிற்கு அனுப்பிய பொருட்கள் எங்கே போச்சு!
நீதானே பெங்காலியா தூதர்! சொல்கிறாயா: முகத்தை இரத்தக் களறியாக்கவா?
நீட் நீயே சொல்லிவிடு!
எல்லா விபரமும் இந்த புத்தகத்தில் இருக்கிறது!
ஜனாதிபதி கூறியது மாயாவிக்கு நினைவில் வந்தது.
மாயாவி! உன் வழியில் விசாரித்தால்தான் உண்மை வெளி வரும்!
உண்மைதான்!
இதற்கு உனக்கு எவ்வளவு பணம கிடைத்தது?
நீட் மெதுவாக நழுவ பார்த்தான்.
உடனே மாயாவி துப்பாக்கியை எடுத்தார்!
ஏய் உள்ளே வா!
இவருக்கு பின்தலையில்கூட கண் இருக்கும் போலிருக்கிறது!
துலானா நாட்டில்—
இன்றைக்கு இரவு விருநது இருக்கிறது
நான் வரவில்லை!
இன்று விருந்தில உங்கள் ஆசை நாயகி நிச்சயம் வருவாள்!
ஆமாம் வருவாள்!!

மாயாவி
நாங்கள் பெங்காலியா தூதரகத்தில் இருந்து வருகிறோம். யார் எங்களை அழைத்தது?
நான்தான் அழைத்தேன் உங்கள்
தூதரும், இவர்களும் சேர்ந்து உங்கள் நாட்டுக்குச் சேரவேண்டிய 30 இலட்ச ரூபாய் பொருட்களை கொள்ளையடித்திருக்கிறார்கள்!
அதற்கு ஆதாரம் இருக்கிறது. நிருபித்துக் காட்டுகிறேன்! முதலில் ஜனாதிபதி லூகா எழுதிய கடிதத்தை பாருங்கள்!
ஓ.கே. சார்!
ம் நடங்கள்!
நிறுத்து! இது சட்டத்துக்கு புறம்பானது!
என்னை கைது செய்ய உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது!
அதை உன் பாது காவலர்களிடமே தெரிந்துகொள்!
உங்களை குற்றவாளி என்று நிருபிக்கும்வரை யாரும் வாயைத் திறக்கக்கூடாது!
ஆ...!
சார் நாங்கள் என்ன செய்வேண்டும்!
சிறிது நேரம் வெளியே இருங்கள்! இன்னும் இவர்களிடம் விசாரணை நடத்தவேண்டியிருக்கிறது!

மாயாவி காவலர்களை வெளியே அனுப்பிவிட்டு விசாரணையை தொடங்கினார்.
பொருட்களை எல்லாம் துலானா நாட்டுக்கு கடத்தியிருக்கிறீர்கள்! யாருக்கு கடத்தி னீர்கள்!
அது வந்து...
யாருக்குடா கடத்தினீர்கள்?
துலானா நாட்டு அரசன் புலாருக்கு!
அந்த பணக்கார அரசன் புலாரும் உங்கள் கூட்டததை சேர்ந்தவனா?
ஆமாம்...!
சரி இவர்களை பத்திரமாக அழைத்துச் செல்லுங்கள். பிறகு பார்க்கி றேன்!
தூலானா நாட்டில்—
என்ன டயானா! உடை மாற்றிக் கொள்ள வில்லை? நேரமா ச்சே!
டாக்டர்! நான் அரண்மனைக்கு வரவில்லை
டயானா! நாம் இங்கு புலாரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது!
நீங்கள் டாக்டர்தானே! எனக்கு காய்ச்சல் என்று சொல்லுங்களேன் நான் அங்கு வரவில்லை!
டயானாவின் பேச்சுக்களை அரசருடைய ஆட்கள் பதிவு செய்தார்கள்.
காய்ச்சல் என்று சொல்லுங்கள்! நான் அங்கு வரவில்லை!
அரசர் இதைக் கேட்டால் எப்படி இருக்கும்!

அவன் டேப்பை புலாரிடம் கொண்டு வந்தான்.
சார்! விருந்துக்கு டயானா வரவில்லை! அவளுடைய பேச்சை பதிவு செய் திருக்கிறேன்! கேட்கிறீர்களா?
முதலில் அதைப்போடு!
நீங்கள் டாக்டர்தானே! எனக்கு காய்ச்சல் என்று சொல்லுங்கள்! நான் அங்கு வரவில்லை!
முட்டாள்! என்னிடமே விளையாட்டு காட்டுகிறாளா?
இரவு விருந்தில்–
அரசே! டயானாவுக்கு உடல்நலம் சரியில்லை. அதனால் அவளால் விருந்துக்கு வரமுடியவில்லை!
அப்படியா? அச்ச்ச்சோ! டயானா உடம்புக்கு என்ன?
சும்மா காய்ச்சல் தான்!
டயானா இப்பொழுது என்ன செய் கிறாள்!
ஆ...!
டயானா அறையில் குளித்துக் கொண் டிருந்தாள்.
தட்...!
தட்...!
அப்பொழுது யாரோ அறைக்கதவை தட்டினார்கள்.
டயானா! நாங்கள் பாதுகாப்பு போலீசார்! உடனே எங்க ளுடன் புறப்பட்டு வரவும்!

பாதுகாப்பு போலீசா? என்னை ஏன் கைது செய்கிறீர்கள்?
எங்களுக்கு வந்த கட்டளை இது!
டயானா! புலார் நெருப்பு மாதிரி. அவருடன் விளையாட்டு வேண்டாம்!
நான் வர மாட்டேன்!
டயானா டாக்டர் கூறியதை நினைத்துப் பார்த்தாள்.
வரமாட்டாயா? வருகிறாயா இல்லை இழுத்துப் போகட்டுமா?
விடுங்கள்! உடை மாற்றிக்கொண்டு வருகிறேன்!
?
போலீசார் அவளை வலுக்கட்டாயமாக இழுத்தார்கள்.
நர்சு ஒருத்தி அதைக் கவனித்தாள்.
விருந்தில்—
டயானாவுக்கு லேசான காய்ச்சல்தான் பயப்படும்படி ஒன்றும் இல்லை!
ரொம்ப நல்லது! போய் வாருங்கள்!
நாங்கள் சென்று வருகிறோம்.!
மீண்டும் சந்திப்போம்!
மன்னர் எவ்வளவு சாந்தமான மனிதர் பார்த்தீர்களா?
சாந்தமான மனிதரா? அவர் ஒரு நல்ல பாம்ப

டாக்டர் ஓட்டலுக்கு வந்தார்.
?!
சார் இரண்டு போலீஸ்காரர்கள் டயானாவை தூக்கிப் போய்விட் டடார்கள்!
நர்சு டாக்டரிடம் விசயத்தை சொன்னாள்.
டயானா அரண்மனைக்கு கொண்டு வரப்பட்டாள்.
நீங்கள் போகலாம்!
இவர்கள் என்னை கைது செய்ய எந்த அதிகாரமும் இல்லை.
பயப்படாதே டயானா! ஏய் இவளை அழைத்துச் சென்று நம்ம வழக்கப்படி நடக்கவேண்டியது
நடக் கட்டும்!
என்னை எங்கே போகச் சொல்கிறாய்?
இது அரசர் புலாரின் அந்தப்புறம் நீ இப்போது அவருடைய விருந்தாளி!
டயானாவை அழை த்துச் சென்றார்கள்.
இது எங்கள் கடமை!
நான் ஏற்கனவே குளித்துவிட்டேன்! என்னை விடுங்கள்!
அந்தப் பெண்கள் டயானாவை குளிக்கச் செய்தார்கள்.
ஏய். விடுங்கள்! என்ன இது?
எனக்கு இந்த உடை வேண்டாம்!
மறுக்காதீர்கள். சும்மா போட்டுக் கொள்ளுங்கள்!

என்ன மட்ட ரகமான ஆடை இது!
அட வெட்கத்தைப் பாரேன்!
?
பெண்ணே இங்கே வா!
நீங்கள் டாக்டர் தானே! எனக்கு உடல்நலம் சரியில்லை என்று சொல்லுங்கள்!
இது என் குரல் அல்லவா!
ஒரு அறையில் இருந்து டயானாவின் குரல் வந்தது.. அந்த அறைக்குள் டயானா எட்டிப்பார்த்தாள்.
அப்படியே சொல்லுங்கள்! விருந்துக்கு நான் வரவில்லை!
ஆ...!
டயானாவின் பேச்சு டேப்ரிக்கார்டரில் இருந்து ஒலிபரப்பானது.
நீங்கள் டாக்டர் தானே! எனக்கு உடல் நலம்...!
டயானா! டாக்டரின் மூலமாக என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்!
இது சும்மா வேடிக்கைக்காக செய்தேன்! என்னை ஏன் இங்கு அழைத்து வந்திருக்கிறீர்கள்!
கிளிக்!
நீ இப்பொழுது என்னுடன் சாப்பிட வேண்டும்!
!?

அதே நேரம்— மாயாவி துலானா நாட்டு விமானதளத்தில் இறங்கினார்.
TULANA AIRPORT
டயானா! நான் உன்னை சாப்பிடத்தான் அழைத்திருக்கிறேன்!
ஓட்டலில்—
வந்தவர்கள் போலீசு உடுப்பு உடுத்தியிருந்தார்களா?
இல்லை டாக்டர்!
உடனே மருத்துவர் ஜீப்பை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.
புலார்! ரொம்பவும்தான் விளையாடுகிறார்!
அவர்களை இப்படியே விடக்கூடாது!
அதேநேரம் மாயாவி துலானாவில் இருந்தார்.
டயானாவை பார்ப்பதற்கு முன் புலாரின் நாட்டை ஒரு சுற்று பார்த்து விட்டு வரலாம்!
அவனுடைய சர்வாதிகாரத்தை பயன்படுத்தி டயானாவை அடைய முயற்சிக்கிறான்!
என்ன வம்பாய்ப் போச்சு!
நான் யு.என். அமைப்பின் தலைமை டாக்டர். அரசர் புலாரை உடனே பார்க்க வேண்டும்!
அது முடியாது!
இல்லை! மிகவும் அவசரம்!
!
டாக்டர் காவலாளியை தள்ளி விட்டு உள்ளே நுழைந்தார்.

சிறிது தூரம் உள்ளே சென்றதும்.
நில்!
இரண்டு துப்பாக்கி வீரர்கள் டாக்டரை வழி மறித்தார்கள்.
என் நண்பர்கள் வெளியே இருக்கிறார்கள். அவர்களை உள்ளே அனுப்பு!
ம்... அசையக் கூடாது!
நாங்கள் புலாரை பார்க்க வேண்டும் முடியுமா? முடியாதா?
புலார் வெளியே வந்தார்.
என்ன டாக்டர்!
டயானாவை இரண்டு பேர் இங்கே தூக்கி வந்துவிட்டார்கள். அவளை உடனே பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் யு.என். அமைப்பில் முறையிடவேண்டியது வரும்!
டயானா இங்கே வந்திருக்கிறாள் என்று யார் சொன்னது:
போலீசார் டயானாவை தூக்கிவந்ததை நர்சுகள் பார்த்திருக்கிறார்கள்!
அதை நிருபிக்க முடியுமா? வந்ததில் இருந்து பிரச்சினையை கிளப்புகிறீர்கள். யு.என். அமைப்பிற்கு உங்கள் குழுவை பற்றி சொல்லவேண்டியது வரும்!

Tex Sampath Tirupur

அதேநேரம் மாயாவி துலானாவை சுற்றிப்பாாத்துக் கொண்டிருந்தார்.
துலானா நாட்டு மன்னன் எண்ணெய்யில் மிதப்பதாக கூறினார்களே! எண்ணெய் கிணறுகள் எங்கே இருக்கிறது?
டயானாவை நிச்சயம் புலார்தான் அரண் மனையில் அடைத்து வைத்திருக்க வேண்டும்!
பேசாமல் போலீசிடம் சொல்ல வேண்டியதுதான்!
முதலில் யு.என். தலைமை அலுவலகத்திற்கு போன் செய்து விசயத்தை சொல்ல வேண்டும்! புலார் நம்மை முட்டாள் என்று நினைத்து விட் டானா?
மாயாவி துறைமுகத் துக்கு வந்தார்.
இந்த கப்பல் யாருடையது!
அரசர் புலாருக்கு சொந்தமானது. இங்கு எல்லாமே அவருடையதுதான்!
அரசர் புலாருக்கு ஏகப்பட்ட கப்பல்கள் இருக்கிறது!
எண்ணெய கிணறுகளும் இருக்கிறதாமே? எங்கேயிருக்கிறது?

இங்கிருந்து சற்றுத் தொலைவில் எல்லாமே எண்ணெய் கிணறுகள்தான்!
அடேயேப்பா! இத்தனை கிணறுகளா? அதனால்தான் உலகில் மூன்றாவது பணக்காரனாக இருக்கிறான்!
மாயாவி நேராக துலானா நாட்டு மருத்துவமனைக்கு வந்தார்.
டயானா! இங்குதான் இருப்பாள் என நினைக்கிறேன்!
டயானாவை பார்க்க வேண்டும்!
டயானா இங்கே இல்லையே!
அரண்மனையில்-
உன்னை திருமணம் செய்வதற்காக எவ்வளவு கஷ்டப பட்டு இங்கே வரவழைத்திருக் கிறேன்!
திருமணத்திற்கா?
ஏன் டயானா? நீ இந்த நாட்டுக்கு ராணி ஆகிவிடலாம்!
அது என்னால் முடியாது!
சார் வால்கர் என்பவர் டயானாவை பார்க்க வந்திருக்கிறார்! பழைய நண்பராம்!
இப்பொழுது பார்க்க முடியாது என்று சொல்லிவிடு!

யாராக இருக்கும்? அவரிடம் உதவி கேட்டால் என்ன?
இங்கே புலாரை எதிர்த்து யாரும் எதுவும் செய்துவிட முடியாது!
ஏன்?
யார் நீ?
மாயாவி உள்ளே நுழைந்தார்.
நான் டயானாவின் பழைய நண்பர். அவளை எங்கே?
அதுதான் சொல்கிறோமே! டயானா இங்கு இல்லை!
அவள் உங்கள் மருத்துவக்குழுவில் தானே இருக்கிறாள்!
ஆமாம்! நான்தான் தலைமை டாக்டர்! அவளைப் பற்றி வேறு எதுவும் கேட்காதே!
ஏன்? அவளுக்கு என்னாச்சு?
எனக்கு ஒன்றும் தெரியாது!
மாயாவி டாக்டரின் சட்டையைப் பிடித்து உலுக்கினார்.
என்ன நடந்தது? சொல்லுங்கள்!
பதட்டப்படாதே! அது சிக்கலான பிரச்சினை!

நாங்கள் ஒரு குழுவாக இங்கே வந்தோம்... புலார் விருந்து வைத்தார். விருந்துக்கு டயானா வரவில்லை! திரும்பிவந்து பார்த்தால் டயானாவை காணவில்லை! நர்சுதான் சொன்னாள்!
?
மாயாவி அந்த நர்சை சந்தித்தார்.
இரண்டு பேர் சாதாரண உடையில் போலீசார் என்று சொல்லி டயானாவை அழைத்துச் சென்றார்கள்!
எங்கே?
எங்கே கூட்டிப் போனார்கள் என்று தெரியவில்லை!
எங்கே வேகமாகப் போகிறார்?
மாயாவி அதைக் கேட்டதும் விரைந்து சென்றார்.
மாயாவி வெளியே வந்து விசாரித்தார்.
கைதிகளை போலீசார் எங்கே கொண்டு செல்வார்கள்!
சிறைக்கு
மாயாவி நேராக சிறைச்சாலைக்கு வந்தார்.
இங்கே டயானா என்ற பெயரில் கைதிகள் இருக்கிறார்களா?
அதைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை!
ஏய்! மரியாதையாக சொல!

வெளியில் இருந்து வந்தவர்கள் யாரும் அடாவடி பன்னினால் இதுதான் பேசும்!
டயானாவை இங்கே கொண்டு வந்தார்களா இல்லையா?
இந்த மிரட்டல் என்னிடம் வேண்டாம்!
உன்னிடம் எனக்கென்ன பேச்சு! இந்தா...!
டும்...!
ஆ...!
ஆ... அய்யோ!
டமார்...!
மாயாவி சிறை அதிகாரியை பந்தாடினார்.
மாயாவி சிறைச்சாலைக்குள் நுழைந்து டயானாவை தேடினார்.
டயானா...! டயானா...!
மாயாவி சிறைக் கைதிகளிடம் விசாரித்தார்.
இன்றைக்கு ஒரு அமெரிக்கப் பெண்ணை இங்கே கொண்டு வந்தார்களா?
அப்படி யாரும் வரவில்லையே!
மாயாவி நேராக போலீசிடம் வந்தார்.
இன்றைக்கு நீங்கள் டயானா என்ற பெண்ணை கைது செய்தீர்களா?
சொல்லுங்கடா? ஆளுக்கால் விளையாடுறீகளா?
!
!
டமார்...!
ஆ...!

அவளை என்ன செய்தீர்கள்? சொல்
டமார்...!
ஆ...!
அரசர் புலாரிடம் இருக்கிறாள்!
மாயாவி அவர்களை தாக்கி விட்டு வேகமாக நடந்தார்.
டெவில் விரைந்து வா!
யார் இவன்? வந்தான் கைவரிசையை காட்டி விட்டு போய் விட்டான்!
அரண்மனையில்– புலார் அந்த டேப்பை மீண்டும் போட்டார்.
நீங்கள் டாக்டர்தானே!
டயானா உன் இனிமையான குரலை கேட்டாயா?
மன்னிக்கவும் அரசே! இது நீங்கள் அனுப்பிய ஆட்களின் வேலை!
என்னை என் ஆட்கள் முட்டாளாக்கப் பார்க்கிறார்களா?
புலார் அந்த டேப்ரிக் காடரையே தூக்கி வீசினார்

நான் போகலாமா? எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்!
அதுமுடியாது! உன் நண்பர்களிடம் இந்தக் கதையை சொல்ல முடியாது!
மாயாவி-புலார் அரண்மனைக்கு வந்தார்.
ஒருவன் நாயுடன் அலைகிறானாம். அவனை மடக்கவேண்டுமாம்!
மாயாவி கோட், தொப்பி, கண்ணாடி அனைத்தையும் கழற்றி வைத்துவிட்டு சாதாரண மாயாவியாக மாறினார்
டெவில் நீ இங்கேயே இரு!
மாயாவி அரண்மனையின் மதில் சுவரில் ஏறினார்.
?
உள்ளே குதித்தார்.
காவலாளி உஷாரானான்.
ஏதோ சத்தம் கேட்டதே?

மாயாவி கல்லை எடுத்து வேறு பக்கமாக வீசினார்.
சலசல...!
இங்கேதான் சத்தம் வருகிறது!
டமார்...!
அவன் கவனம் திரும்பியதும் மாயாவி அவன் மீது பாய்ந்தார்.
!
சத்தம் அங்கே அல்ல! இங்கேதான்!
என்னைக் கடத்தி வந்து இந்த மாதிரி உடையை உடுத்தச் சொல்லி என்னை அவமானப் படுத்துகிறாய்!
இது ஒன்றும் புதிய உடை இல்லை! வழக்கத்தில் உள்ளதுதான்!
ஏன் உங்கள் நாட்டில் இந்த மாதிரி உடையை பார்த்தது இல்லையா?
பைத்தியக்காரன் மாதிரி பேசாதே!
யார் நானா பைத்தியக்காரன்!

புலார் அரசர் கலீல் என்பவனை அழைத்து வந்தார்.
கலீல்! இவளுடைய மதிப்பு எவ்வளவு?
இவளா? பார்த்து சொல்கிறேன்!
பெண்ணே! உன் பல்லைக் காட்டு பார்ப்போம்!
டயானா கலீல் கையை கடித்து வைத்தாள்
புலார் ஏன் இப்படி கடிச் கிறாள்?
அது உங்களுடைய பிரச்சினை. இதில் நான் தலையிட விரும்பவில்லை!
நல்ல இளமையோடு இருக்கிறாள்!
கலீல் டயானாவை தூக்கினான்.
முதலில் அவளை இறக்கி விடு!
ரொம்பவும் ஆத்திரப்படுகிறாள்! இவள் மதிப்பு 10 இலட்சம் தான்!
பளார்..
கலீல் கன்னத்தில் அறை விழுந்தது.
முட்டாள்! இவள் அரைக்கோடிக்கு சமமானவள்!
எனக்கா விலை பேசுகிறார்கள்!

அரை கோடியா? ரொம்பவும் அதிகம்!
வேண்டுமானால் 5 இலட்சம் தரலாம்!
அரைக்கோடி!
இவளை வைத்துதான் நீ நல்ல ஆதாயம் பார்ப்பாயே?
நிறுத்துங்கள்!
என்னை விலை பேசி விற்கவா இங்கே அழைத்து வந்தாய்?
நீதானே என்னை பைத்தியக்காரன் என்றாய்! அதான் என் குணத்தை காட்டுகிறேன்!
டயானா!
அப்பொழுது மாயாவி அங்கே வந்தார்.
சரி என் கமிசனையும் சேர்த்து கால் கோடி தருகிறேன்!
ஓ.கே. அவளை எடுத்துக்கொள்!

பாதிப்பணம் இப்பொழுது தருகிறேன்! மீதியை 90 நாளில் கொடுத்து விடுகிறேன்!
இல்லை! பணத்தை மொத்தமாக கொடுத்து விட்டு அழைத்துப் போ!
இதற்குமுன் கடன் கொடுத்திருக்கிறீர்களே!
ஆனால் இப்போது கடன் இல்லை!
என்ன நடக்கிறது என்பது மாயாவிக்கு புரிந்துவிட்டது!
பணத்தை மொத்தமாக கொடு!
நான் இப்பொழுது பாதி தருகிறேன். இவளை திருமணம் செய்த பிறகு மீதியை தருகிறேன்!
திருமணமா?
கலீல்! வாக்குவாதம் வேண்டாம்!
என்னை விட்டால் வேறு எவரும் இவளை இவ்வளவு விலைக்கு வாங்க மாட்டான்!
ஏன் நான் இருக்கிறேன்! நானே அவளை வாங்கிக் கொள்கிறேன்!
!
!
அப்போது மாயாவி உள்ளே நுழைந்தார்.

யார்?
நீங்கள்!
ஏய்...
யாரது?
அன்பே! நீங்கள்
எப்படி இங்கே?
அது ஒரு
கதை!
நான் உன்னையும்
அரசரையும் பார்க்க
வந்தேன்!
நானே உன்னை
விலைக்கு
வாங்குகிறேன்!
யார்
நீ? உன்னை யார் விலை
கேட்கச் சொன்னது?
நீ அவளுக்கு
எவ்வளவு
பணம்
தருவாய்?
இவ்வளவு
அழகான பெண்! எவ்வளவு
பணம் வேண்டுமானாலும்
கொடுக்கலாம்!

அரசே! நான் இப்பொழுதே கால் கோடி பணம் தருகிறேன்! அவள் எனக்கு வேண்டும்!
உன் விலை என்ன?
உனது உயிர்?
என்ன சொல்கிறாய்! என் உயிரா? இவளை தரமுடியாது?
யாரங்கே? என் இடத்திற்கு வந்து என் உயிரையே கேட்கிறாயா?
இரண்டு காவலாளிகள் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தார்கள்.
வேண்டாம்!
இந்த முகமுடியை வெளியே இழுத்துச் சென்று சுட்டுச் கொல் லுங்கள்!
அரசே அவரை விட்டு விடுங்க!
அப்படியா? இல்லை இங்கேயே இப்பொழுத என் கண் முன்னால் சுட்டுத்தள் ளுங்கள்!

காவலாளிகள் துப்பாக்கியை எடுப்பதற்குள் மாயாவி துப்பாக்கியை எடுத்து அவர் களை சுட்டுத் தள்ளினார்.
டுமில்...!
டுமில்...!
காவலாளிகளின் துப்பாக்கிகள் எகிறி விழுந்தது.
ஆ...!
ஆ...!
அதற்குள் கலீல் ஒரு கத்தி எடுத்து மாயாவியை குறிவைத்து வந்தான்.
அன்பே! பின்னால் பாருங்கள்!
கலீல் கத்தியை சுழற்றியபோது மாயாவி லாவகமாக குனிந்துகொண்டார்.
புலார் அதிர்ச்சியடைந்து போனார்.
ஏய் ஓடி வாருங்கள்!

Tex Sampath Tirupur

இல்லை! இது பொய்!
பெங்காலியாவுக்கு அனுப்பிய 30 கோடி ரூபாய் பொருளை திருடிய தற்கு ஆதாரம் இங்கே இருக்கிறது!
மாயாவி லூகாவிடம் தொடர்பு கொண்டார்.
இப்போதே துலானா நாட்டுக்கு விமானம் அனுப்பி வைக்கிறேன்!
விமானத் திற்காக காத்திருக கிறோம்!
பெங்காலியா நாட்டு ஜனாதிபதி லூகாவிடம்தான் பேசினேன்! உன்னைப் பற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?
இது என் நாடு! என் பலம் உனக்குத் தெரியாது. என்னை எப்படி வெளியே கொண்டு செல்வாய் பார்தது விடுவோம்!
பெங்காலியாவும், யு.என். அமைப்பும் இங்கே வரப்போகிறது. உன்னைக் கைது செய்ய!

அரைக்கோடி என்றால் பேசு! கடன் என்ற பேச்சுக்கு இடமில்லை!
இந்த டேப்பை வைத்துதானே என்னை மிரட்டினாய்...! இப்பொழுது பார்த்தாயா?
யு.என் அமைப்பு இதைக் கேட்டாலே போதும்!
உன் காரை தயாராக இருக்கச்சொல். பெங்காலியா விமானம் காத்திருக்கிறது!
உன்னை உயிரோடு விடமாட்டேன்!
நீயே வேடிக்கையை பார். வா டயானா நாம் புறப் படலாம்!
அரசரும் நம்முடன் வரட்டுமே?
பலாரை வெளியே அழைத்து வந்தார் மாயாவி?
உன் ஆட்களை அசையச் சொல் லாதே!
யாரும் அசையா தீர்கள்!
மாயாவியும் டயானாவும் விமானத்தில் ஏறினார்கள்.
பைலட்! அவரசப் படாதே!
எங்களுடன் அரசர் புலாரும் வருகிறார்!

பெங்காலியாவில்-
புலார் 30 கோடி ரூபாய் பொருளை திருடியதற்கு ஆதாரம் இதில் இருக்கிறது!
உனக்கும் டயானாவுக்கும் தான் நன்றி சொல்ல வேண்டும்!
சார் நான் போய் இந்த உடையை மாற்றிவிட்டு வருகிறேன்!
மறுநாள் பத்திரிகையில்-
அரசர் புலார் திடீர்க் கைது! நாட்டை ஏமாற்றி தன்னை அரசராக்கிகொண்டு இருந்த புலார் கைது செய்யப்பட்டார்!
அரசரின் கதி அதோ கதிதான்!
பாவம் உன் அம்மா இந்த செய்தியை படித்தால் அதிர்ச்சி யாகி விடுவார்! உலகின் 3-வது பெரிய மனிதரை உனக்கு மனம் முடிக்க ஆசைப் பட்டார்!
அதைப்பற்றி இப்பொழுது ஏன் பேசவேண்டும்!
டயானா வீட்டில்-
ஆ! மோசம் போய்விட்டேனே!
அதற்குத்தான் தோற்றத்தைப் பார்த்து யாரையும் எடை போட்டு விடக்கூடாது!
முடிந்தது

...ம் பக்கத் தொடர்ச்சி

...டுப்பு எலும்பு மாற்று அறு...வை சிகிச்சைக்கு 'ரோபோ...டாக்' என்னும் எந்திரமனித...னை பயன்படுத்துகின்றனர்.

இதற்கும் கம்ப்யூட்டர் பெரு...ளவில் உதவுகிறது. எலும்புக்...குப் பதிலாகப் பொருத்தப்ப...டும் மாற்று எலும்பை 'டைடே...னியம்' என்னும் உலோகத்தில் ...ருவாக்குகிறார்கள். கம்ப்யூட்...டரைப் பயன்படுத்தி இந்த ...எலும்பு வெட்டி எடுக்கப்படுகி...றது.

அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய இடுப்பு எலும்பின் வடிவம் கம்ப்யூட்டர் திரையில் உருவாக்கப்படுகிறது. அதன்மேல் பொருத்துவதற்குத் தேவையான மாற்று எலும்பை கம்ப்யூட்டர் திரையைப் பயன்படுத்தி டாக்டர்கள் தேர்வு செய்கின்றனர். இரண்டு எலும்பும் ஒன்றுக்கொன்று பொருந்துகிறதா என்று கம்ப்யூட்டர் திரையில் உள்ள வடிவங்களில் ஒன்றன்மேல் ஒன்றைப் பொருத்தி ஆராயப்படுகிறது. சரியாகப் பொருந்துவதாக டாக்டர்கள் திருப்தியடைந்தவுடன் உண்மையான அறுவை சிகிச்சை தொடங்குகிறது.

நோயாளியின் இடுப்பில் அறுவை சிகிச்சை செய்து இடுப்பு எலும்பை டாக்டர்கள்



வெட்டி எடுக்கின்றனர். அதில் பழுதுற்ற பாகத்தை வெட்டிவிட்டு, டைடேனியத்திலான செயற்கை எலும்பை அதனுடன் இணைக்கின்றனர். இதன் பிறகு 'ரோபோடாக்' என்னும் இயந்திரம் அதில் வேகமாகத் துளையிடுகிறது. கம்ப்யூட்டர் படத்தை அடிப்படையாக வைத்து அது இந்தப் பணியைச் செய்து முடிக்கிறது. அதன்பிறகு அதனை நோயாளின் இடுப்பு எலும்பில் பொருத்தி, மற்றொரு டைடேனியம் முடுக்கியைப் பொருத்தி வெற்றிகரமாக இணைக்கின்றனர்.

'ரோபோடாக்' இயந்திரத்தைப் பயன்படுத்தி 18 நாய்களுக்கு இதுபோன்ற இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சைகளை டாக்டர் ஹோவர்ட் பால், டாக்டர் வில்லியம் பர்கர் ஆகியோர் வெற்றிகரமாக நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

ராணியில்

புதிய சிறுவர்
தொடர்கதை

சிவகுமார்

எழுதும்

பட்டத்து இளவரசன்

மந்திரவாதியின் சூழ்ச்சிகளை
முறியடிக்கும் வீர இளவரசனின் கதை!
படித்து மகிழுங்கள்!

"ராணி" வார இதழ், சென்னை-600 007.

RANI COMICS
TAMIL FORTNIGHTLY
Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

அடுத்த காமிக்ஸ்

முரட்டுக்காளை கார்த் தோன்றும்

வால்நட்சத்திரம்

விறுவிறுப்பான விண்வெளிக் கதை!

படிக்கத் தவறாதீர்கள்!!

பிப்ரவரி 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.